சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

முன்னிலை : **திரு. D. மாரிக்காளை, B.Sc., M.L.,**

**சார்பு நீதிபதி, கோவில்பட்டி.**

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 08 ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.26/2020**

[CNR No. : TNTT050002432020]

------

சுப்புராம் ... வாதி

... எதிர்...

1. மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி
2. வட்டாட்சியர், விளாத்திகுளம் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பு 18.04.2026-ம் தேதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சத்தியநாராயணன், அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், போதிய வாய்ப்பளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தினாலும் பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரைக்கும் இந்நீதிமன்ற பரிசீலினையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

பிராது தபசில் சொத்து வாதிக்கே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், மேலும் நத்தம் நில வரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் இதன் தபசில் கண்ட சொத்து குறித்து "சர்க்கார் மனை" என்று தவறுதலாக இருப்பதிலிருந்து "ரயத்து சொத்து" என்று திருத்தி

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:16:52 +0530

உத்தரவிட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கின் வாதியால், பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல்.

**<u>2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிராதின் சுருக்கம் :-</u>**

இவ்வழக்கில் தபசில் கண்ட சொத்தானது ஆதியில் வாதியின் தந்தை K.M. குமாரசாமி நாயக்கருக்கு (த/பெ.குமாரசாமி நாயக்கர்) பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தாகும். மேற்படி சொத்து வாதியின் தந்தையான K.M. குமாரசாமி நாயக்கரின் முன்னோர்களால் ஆண்டு அனுபவிக்கப்பட்டு வந்து, தபசில் சொத்தின் கட்டிடமானது வாதியின் தகப்பனாரால் 1954ம் வருடம் கட்டப்பட்டு நாளது தேதி முதல் அவரால் அதற்குரிய தீர்வை முதலியவை செலுத்தப்பட்டு ஆண்டு அனுபவிக்கப்பட்டு வந்தது. அந்த நிலையில் வாதியின் தந்தை K.M.குமாரசாமி நாயக்கர் 03.06.1999ல் இதன் தபசில் கண்ட சொத்து மற்றும் பிற சொத்துக்கள் குறித்து வாதிக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துவிட்டு கடந்த 30.12.2000 அன்று வாதியின் தந்தை K.M.குமாரசாமி நாயக்கர் இறந்துவிட்டார். அவர் இறந்த உடன் அவரால் எழுதி வைக்கப்பட்ட உயில் ஆவணமானது நடைமுறைக்கு வந்து தபசில் சொத்து மற்றும் பிற சொத்துக்களை நாளது தேதி முதல் வாதி பெயரில் புதூர் பஞ்சாயத்தில் தீர்வை முதலியவை செலுத்தப்பட்டு ஆண்டு அனுபவித்து வருகிறார். இந்த நிலையில் நத்தம் நில வரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் இதன் தபசில் கண்ட சொத்து குறித்து காலம் 4 மற்றும் 5ல் தவறுதலாக "ச.ம" என்று அதாவது "சர்க்கார் மணை" என்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிவானது தவறானது மற்றும் எந்தவித ஆவணமும் ஆதாரமும் இன்றி தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதே பதிவேட்டில் 12வது காலத்தில் வாதியின் பெயரானது "பட்டா எண்ணும் பதிவு செய்யப்பட்ட நில உரிமையாளரின் பெயரும்" என்ற தலைப்பின் கீழ் காணப்படுகிறது. பிராது தபசில் சொத்தானது வாதிக்கு தனிப்பட்ட சொத்தாகும். வாதியானவர் பல முறை நேரில் சென்று 2ம் பிரதிவாதியிடம் சென்று மேற்படி

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:16:58 +0530

பதிவேட்டில் தவறுதலாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ள சர்க்கார் மனை என்பதை திருத்துவதற்கு அறிவுறுத்தியும் 2ம் பிரதிவாதியால் திருத்துவதற்கு மறுக்கப்பட்டது. வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு 18.06.2019 ல் அனுப்பப்பட்டது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகளால் 19.06.2019 ல் பெறப்பட்டும் அதன்பின்னரும் பிரதிவாதிகளால் மேற்படி பதிவேட்டில் தவறுதலாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதை மாற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே பிராது தபசில் சொத்து வாதிக்கே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், மேலும் நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் இதன் தபசில் கண்ட சொத்து குறித்து சர்க்கார் மனை என்று தவறுதலாக இருப்பதிலிருந்து ரயத்து சொத்து என்று திருத்தி உத்தரவிட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதி நிறுவனத்தால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இவ்வழக்கில் பிரதிவாதிகள் அரசு வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்த நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதிய வாய்ப்பளித்திருந்தும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தினால் இவ்வழக்கில் பிரதிவாதிகள் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளனர்.

**4.** அசல் வழக்கு மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்த பின்னர் கீழ்க்கண்ட பிரச்சனைகள் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:02 +0530

**<u>ஆய்வுக்குரிய பிரச்சனைகள் : –</u>**

1) **பிராது தபசில் சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா?**

2) **பிராது தபசில் சொத்து சம்பந்தமான நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் சர்க்கார் மனை என இருப்பதை திருத்தம் செய்து ரயத்து சொத்து என மாற்றம் செய்ய பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா?**

3) **வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

**5.** இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி சுப்புராம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான ஆவணங்களும், மாரிபாண்டி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.6 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6. பிரச்சனை எண்கள் 1, 2 மற்றும் 3–க்கான தீர்வு :–</u>**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட்டது. இந்த வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குச் சொத்து வாதிக்கு மட்டும் சொந்தமானது என விளம்புகை செய்யக்கோரியும், பிராது தபசில் சொத்தை வாதி அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் தபசில் சொத்து குறித்து சர்க்கார் மனை என்று தவறுதலாக இருப்பதிலிருந்து ரயத்து சொத்து என்று திருத்தி உத்தரவிட செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:06 +0530

நிலையில் வாதியே தாவா சொத்தின் உரிமைமூலம், தாவா சொத்தின் மீதான சட்டப்படியான அனுபவம் மற்றும் பிராது சங்கதிகளை இந்திய சாட்சிய சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இவ்வழக்கில் வழக்கிடைச் சொத்தாக புதூர் பேரூராட்சி குளக்கட்டான்குறிச்சி கிராமத்தில் பழைய நத்தம் சர்வே 23 புதிய நத்தம சர்வே எண்.136/6 நம்பரில் S.R.நாயுடு 4 வது தெருவில் க.எண்.12/2 ல் உள்ள கல் கட்டு ஓட்டு வீடு காட்டப்பட்டுள்ளது.

**7.** இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி சுப்புராம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான ஆவணங்களும், மாரிபாண்டி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.6 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்களை கவனமாக பரிசீலிக்கையில், 03.06.1999 ம் தேதியில் K.M.குமாரசாமி நாயக்கரால் வாதி பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 18.06.2019 ல் பிரிவு 80 சி.பி.சியின் கீழ் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட சட்டப்படியான அறிவிப்பு நகல் வா.சா.ஆ.3 ஆகவும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4 ஆகவும், K.M.குமாரசாமி நாயக்கரின் இறப்பு சான்று நகல் வா.சா.ஆ.5 ஆகவும், வா.சா.2 மாரிப்பாண்டியின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கவனமாக கருத்திற் கொள்கிறது.

**8.** இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு வழக்கு விவரங்கள், பிராது பரிகாரங்கள் பற்றி தெரிந்து இருந்து வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்தாலும், வாதியின் வழக்கை மறுத்துரைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி எதிர்வழக்காட முன்வராத நிலையில், இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றம் எதிரிடை அனுமானம்

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:11 +0530

கொள்கிறது. மேலும் வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கையில், வா.சா.ஆ.1 ஆவணம், வாதியின் பெயருக்கு வாதியின் தகப்பனாரான K.M.குமாரசாமி நாயக்கர் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து எழுதி வைத்த உயில் ஆவணமாக உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில், பிராது தபசில் சொத்து குறித்த நத்தம் நிலவரிதிட்ட தூய அடங்கல் பதிவேடாக உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணமானது இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு இவ்வழக்கின் வாதியால் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பாக உள்ளது. மேற்படி வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4 ஆவணமாக உள்ளது. வாதியின் தந்தை K.M.குமாரசாமி நாயக்கர் இறந்ததைக் காட்டக்கூடிய இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.5 ஆவணமாக உள்ளது. வா.சா.2 மாரிப்பாண்டி என்பவரின் ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.6 ஆவணமாக உள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் அடிப்படையில் வாதிக்கு பிராது தபசில் சொத்து கிடைக்கப்பெற்று, வாதி தபசில் சொத்தை அனுபவம் செய்து வருவது தெளிவாக புலனாகிறது. மேலும் வா.சா.ஆ.2 நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் இதன் தபசில் கண்ட சொத்து குறித்து காலம் 4 மற்றும் 5ல் தவறுதலாக ச.ம என்று அதாவது சர்க்கார் மனை என்று பதிவேற்றம் செய்துள்ளதை திருத்தம் செய்யக் கோரி 2ம் பிரதிவாதியிடம் அறிவுறுத்தியும் 2ம் பிரதிவாதியால் மறுக்கப்பட்டுள்ளதும், அதனால் வாதியானவர் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதும் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்கள் மூலம் தெளிவாகியுள்ள நிலையிலும், பிரதிவாதிகள் தரப்பில் அந்த சங்கதிகளை மறுத்து இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முன்வராத நிலையில் அந்த சங்கதிகளை பொறுத்து வாதிக்கு சாதகமாகவே இந்நீதிமன்றம் அனுமானம் கொள்கிறது. மேற்படி வாதி தரப்பில்

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:15 +0530

குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சாட்சியங்கள் அடிப்படையிலும், வாதி தரப்பில் பிராது தபசில் சொத்தின் உரிமைமூலம் சம்பந்தமாக சங்கதிகள் தெளிவாக நிரூபணமாகிறது. அதன்படி வாதி தாவா சொத்தின் சட்டப்படியான உரிமையாளர் என்பது தெளிவாக நிரூபணமாகிறது. இந்த நிலையில், பிராது தபசில் சொத்தின் உரிமைமூலம் மற்றும் அனுபவம் சம்பந்தமாக பிரதிவாதிகள் இவ்வழக்கில் முன்னிலையாகி அதை மறுத்து வழக்கை நடத்த முன்வரவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கவனமாக கருத்திற் கொள்கிறது.

9. மேலும் இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 உயில் ஆவணம் பற்றியும், பிராது தபசில் சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பது பற்றியும், மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த வா.சா.2 மாரிப்பாண்டி என்பவர் தனது நிரூபண வாக்குமூலத்தில் பின்வருமாறு தெளிவாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

> **“... இவ்வழக்கின் வாதியின் தகப்பனாரான குமாரசாமி நாயக்கர் 03.06.1999 அன்று தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து தன்னுடைய மகனான இவ்வழக்கின் வாதிக்கும், மகன் ஜெயபாரதி என்பவருக்கும் ஒரு உயில் சாசனம் பிறப்புவிக்க முடிவு செய்தார். மேற்படி முடிவினை தெளிந்த சிந்தனையுடனும் தனக்கு பிறகு தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எவ்வாறு அனுபவிக்க வேண்டும் என்ற தீர்க்கமான முடிவுடனும், உயில் சாசனம் பிறப்புவிக்க முடிவு செய்தார். அது வகைக்கு என்னையும், புதூரை சார்ந்த கருப்பசாமி தேவர் என்பவரையும் குளக்கட்டாக்குறிச்சி கிராமத்தை சேர்ந்த கோதண்டராமசாமி என்பவரையும் சாட்சிகளாக கையெழுத்து போட அழைத்தார். மேற்படி 03.06.1999 தேதியில் மேற்படி குமாரசாமி நாயக்கர் சொல்ல சொல்ல புதூரை சேர்ந்த**

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:20 +0530

**ஆவண எழுத்தர் மேற்படி உயிலினை எழுதினார். பின்பு மேற்படி உயிலினை குமாரசாமி நாயக்கரிடம் வாசித்து காண்பித்தார். பின்பு மேற்படி உயிலில் புதூர் சார்பதிவாளர் முன்புக்கு சாட்சிகளாகிய எங்கள் முன்னிலையில் வாதியின் தகப்பனார் குமாரசாமி நாயக்கர் கையெழுத்தை செய்தார். அதை நாங்கள் பார்த்தோம். அதன்பின்பு வாதி தகப்பனார் குமாரசாமி நாயக்கர் முன்னிலையில் சாட்சிகளாகிய நாங்கள் கையெழுத்து செய்தோம். நாங்கள் கையெழுத்து செய்ததை மேற்படி குமாரசாமி நாயக்கர் பார்த்தார். மேற்படி குமாரசாமி நாயக்கர் 30.12.2000ல் காலமான பின்பு உயிலில் கண்டபடி வாதியும் அவரது சகோதரியும் சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள்...”**

மேற்படி வா.சா.2ன் சாட்சியத்தின் அடிப்படையில் பிராது தபசில் சொத்து வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டு, வாதியின் தகப்பனரால் இவ்வழக்கின் வாதிக்கு வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது என்ற சங்கதி தெளிவாக நிரூபணமாகிறது. மேலும் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வாதியின் தந்தை குமாரசாமி நாயக்கர் இவ்வழக்கின் வாதி பெயரில் எழுதிக்கொடுத்துள்ள வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் நிறைவேற்றம் [Execution] மற்றும் சான்றொப்பம் [ATTESTATION] இந்திய சாட்சிய சட்டப்படி வாதி தரப்பில் தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணமும் வழக்குரை சங்கதிகளுக்கு ஆதரவாகவும், வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாகவும் அமைந்துள்ளதை இந்நீதிமன்றம் கவனமாக கருத்திற் கொள்கிறது.

**10.** மேலும் வாதி தரப்பு வாய்மொழி சாட்சியங்கள், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:24 +0530

தனித்துப் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய வேண்டுமென வாதி தரப்பில் கோருவது சட்டப்படி ஏற்புடையதாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வா.சா.ஆ.2 நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் சர்க்கார் மனை என இருப்பதை திருத்தம் செய்து ரயத்து சொத்து என மாற்றம் செய்து உத்தரவிட வேண்டுமென வழக்குரை மற்றும் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் அந்த சங்கதிகளை மறுத்து இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முன்வராத நிலையில் அந்த சங்கதிகளை பொறுத்து வாதிக்கு சாதகமாகவே இந்நீதிமன்றம் அனுமானம் கொள்கிறது. மேலும் வாதியின் வழக்குரை சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் வா.சா.1 மற்றும் வா.சா.2 ன் சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்களும் அமைந்துள்ளதாலும், வாதிக்கு சாதகமாகவே இந்நீதிமன்றம் அனுமானம் எடுக்க வேண்டியுள்ளது.

**11.** மேலே விவரித்ததின் அடிப்படையிலும், வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்களின் அடிப்படையிலும், வாதி தரப்பில் வழக்கு தெளிவுற நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் தாவா சொத்தானது வாதிக்கு வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்பது தெளிவாக நிரூபணமாகிறது. மேலும் வா.சா.1 மற்றும் வா.சா.2–ன் சாட்சியமும், வா.சா.ஆ.1 உயில் ஆவணம் மற்றும் வாதியின் வழக்கை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளதையும் மற்றும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், வாதியானவர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளவாறு, தாவா சொத்தைப் பொறுத்து இவ்வழக்கின் வாதி சட்டப்படியான உரிமையாளர் என்பது நிரூபணமாகிறது. வாதி தரப்பு ஆவணங்கள் மூலம் பிராது தபசில் சொத்து வாதியின் சட்டப்படியான அனுபவத்தில் இருந்து வருகிறது என்ற சங்கதியும் தெளிவாக நிரூபணமாகிறது. மேலும் தாவா சொத்தின் உரிமைமூலம் மற்றும் சட்டப்படியான அனுபவம் வாதி

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:28 +0530

தரப்பில் தக்க சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையிலும், பிராது தபசில் சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்து வருவதாக உள்ள சங்கதி வாதி தரப்பு சாட்சியங்கள் மூலம் தெளிவாகியுள்ள நிலையிலும், இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக பிராது தபசில் சொத்தின் உரிமைமூலத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்து தீர்வு காண்கிறது.

**12.** மேலும் தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையிலும், தபசில் சொத்தின் மீதான அனுபவம் வாதி தரப்பில் தக்க ஆவணங்கள் மூலம் தெளிவுற நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையிலும், இவ்வழக்கில் தொடர்பரிகாரமாக வாதி கோரியுள்ள தாவா சொத்தைப் வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் சட்டப்படி வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும், மேலும் வா.சா.ஆ.2 நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் சர்க்கார் மனை என இருப்பதை திருத்தம் செய்து ரயத்து சொத்து என மாற்றம் செய்து உத்தரவிட வேண்டுமென பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்கண்ட பிரச்சனை எண்கள். 1 முதல் 3 ற்கும் அவ்வாறே தீர்வு காணப்படுகிறது.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:32 +0530

13. முடிவில், இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு,

i) பிராது தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

ii) பிராது தபசில் சொத்தை வாதி அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

iii) நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் தபசில் சொத்தின் வகைபாட்டை "ரயத்து சொத்து" என திருத்தம் செய்ய பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

iv) வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு, செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லச் சொல்ல அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிரதி எடுக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, கையெழுத்திடப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 08 ம் தேதி திங்கட்கிழமை என்னால் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:36 +0530

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

## பின் இணைப்பு

| | | |
|---|---|---|
| **வாதி தரப்பு சாட்சிகள்** | 1) வா.சா.1 | சுப்புராம் [வாதி] |
| | 2) வா.சா.2 | மாரிப்பாண்டி |

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :**

| வ.எண். | நாள் | ஆவணங்களின் விபரம் |
|---|---|---|
| 1. | 03.06.1999 | K.M.குமாரசாமி நாயக்கரால் வாதி பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட உயில் |
| 2. | -- | நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் |
| 3. | 18.06.2019 | பிரிவு 50 சிபிசி-ன் கீழ் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட சட்டப்படியான அறிவிப்பு நகல் |
| 4. | 19.06.2019 | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| 5. | -- | வாதியின் தந்தை K.M.குமாரசாமி நாயக்கரின் இறப்பு சான்றிதழ் |
| 6. | -- | வா.சா.2 மாரிப்பாண்டி என்பவரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் |

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.06.08 16:17:41 +0530

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.
அசல் வழக்கு எண்.26/2020.
நேரிய தீர்ப்புரை.
தேதி : 08.06.2026.